# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the Court of Judicial Fast Track Magistrate, Srivilliputtur.

STC.No. 1380/2024
Deposition of Witness for D.W. 1

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **பெயர்** | : | ராஜேந்திரன் | **தாலுகா** | : | |
| **த.பெ.** | : | கோனேரி செட்டியார் | **தொழில்** | : | |
| **ஊர்** | : | | **வயது** | : | |

Solemenly affirmed in accordance with the Provisions of Act X of 1873 of the day of 15.10.2025.

புகார்தாரர் ஆஜர்.எதிரி ஆஜர்.

**முதல் விசாரணை**

நான் 45 வருடங்களாக அரிசி வியாபாரம், பயறு வியாபாரம் பார்க்கிறேன். நான் சிவக்குமாரிடம் நெல் வாங்கவில்லை. சிவக்குமாரை யார் என்று எனக்கு தெரியாது. நான் மணோகரன் என்பவரிடம் நெல் வாங்கியிருந்தேன். மனோகரன் என்பவருக்கு வங்கி மூலமாக அவரது வங்கி கணக்கில் ரூ.4,30,000/- அனுப்பியுள்ளேன். நான் கனரா வங்கியில் கணக்கு வைத்துள்ளேன். மனோகரன் வங்கி ஸ்ரீவில்லிபுத்தூர் கிளை தமிழ்நாடு மெர்க்கண்டைல் வங்கி கணக்கு ஆகும். என் வங்கி கணக்கு பட்டியலை நான் தாக்கல் செய்கிறேன். அது **எ.சா.ஆ.1** ஆகும். மனோகரனிடம் நான் ரொக்கமாக ரூ.40,000/- கொடுத்துள்ளேன். மனோகரனுக்கு நான் பாக்கி தொகை ரூ.80,000/- கொடுக்க வேண்டும். காசோலையில் நான் வெறுமனே கையொப்பம் மட்டும் செய்து மனோகரனிடம் கொடுத்தேன். மனோகரன் காவல் நிலையத்தில் பாக்கி தொகையை வாங்கித் தரச் சொல்லிக் கேட்டார். அங்கு மூன்று மாத கால அவகாசம் கொடுத்தார்கள்.

மனோகரன் கையில் இருந்த காசோலையை வேறு நபர் பெயரில் தாக்கல் செய்துள்ளார். நான் காசோலையை திரும்பக் கேட்டதற்கு அவர் கொடுக்கவில்லை. நான் புகார்தாரரிடம் 10.10.2024 அன்று கடன் வாங்கியதாக அறிவிப்பில் சொல்லப்பட்டுள்ளது அன்றைய தினம் நான் அந்த ஊரில் இல்லை. அன்றைய தினம் நான் அலுங்காநல்லூர் பக்கம் கல்வேலியில் இருந்தேன்.

புகார்தாரரை எனக்கு யாரென்று தெரியாது. இந்த வழக்கு பொய்யான வழக்கு ஆகும்.

**குறுக்கு விசாரணை :**

புகார்தாரர் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டி அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

நீதித்துறை விரைவு நடுவர்
திருவில்லிபுத்தூர்.